REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

சென்னை கவர்னர் சம்பளம்

(இந்த ஆண்டிற்கு)

1. அடிப்படைச் சம்பளம்	ரூ.	50,000
2. விருந்து செலவுப் படி	ரூ.	23,000
3. ஊழியர்கள் செலவுப் படி	ரூ.	57,000
4. மாளிகை ஊழியர்கள் செலவுப் படி	ரூ.	2,26,000
5. ஒப்பந்தச் செலவுப் படி	ரூ.	1,50,000
6. சுற்றுப்பயணச் செலவுப் படி	ரூ.	1,00,000
7. விருப்பப் படிச் செலவு	ரூ.	25,000
8. மாளிகை பாதுகாப்புச் செலவு	ரூ.	3,35,000
மொத்தம்	ரூ.	9,72,000

மலர் 2] சென்னை: மாசி 23உ திங்கள் (7—3—55) ★ ★ வெளியீடு: மாசி 24உ செவ்வாய் (8—3—55) [இதழ் 226

அகதிகளுக்கு சலுகைமேல் சலுகை

ஓடி வருபவர்களுக்கும் குடியுரிமை அளிக்க!

இந்தியக் குடி உரிமை சட்டமே திருத்தப்படுமாம்!

தனி நபர் கோரிக்கை மக்கள் சபையில் நிறைவேறியது

1949-ம் ஆண்டு ஜுலை 15-ந் தேதியோடு, பாகிஸ்தானிலிருந்து அகதிகள் இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஓடிவருவது நின்றுவிடவில்லை; இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது; இனியும் தொடரக்கூடும் என எதிர்பார்ப்பதற்கும் இடமிருக்கிறது.

மேற்குறித்த காலக் கெடுவிற்குப் பிறகு பாகிஸ்தானிலிருந்து வந்த அல்லது வந்துகொண்டே இருக்கும் அகதிகளுக்கு, இந்தியக் குடிஉரிமை வழங்குவதை, இந்திய அரசியல் சட்டம் திட்டவட்டமாக அனுமதிக்கவில்லை; எனவே, அதைத் திருத்த வேண்டியது கட்டாயமாகிறது.

மேற்குறித்த தேதிக்குப் பிறகு வந்தவர்களுக்கும், வந்து கொண்டே இருப்பவர்களுக்கும், இனியும் வரவிருப்பவர்களுக்கும் இந்தியக் குடிஉரிமை கிடைக்கும் வகையில் குடிஉரிமைச் சட்டத்தைத் திருத்த, இந்தியப் பேரரசு ஏற்கனவே கருதிக் கொண்டு இருக்கிறது.

அதைத் தீவிரப்படுத்தும் வகையில், மேற்கு வங்க உறுப்பினரான பி. சி. கோஷ், ஒரு தீர்மானத்தை மக்கள் சபையில் கொண்டுவந்தார். அத்தீர்மானம் எஸ். என். டிவிவேடி என்ற உறுப்பினர் பெயரில் கொண்டுவரப்பட்டுள்ளதாகும். அத்தீர்மானத்தின் உள்ளுணர்வைத் தாம் முழுமனதுடன் ஆதரிப்பதாக உள்நாட்டு அமைச்சர் வல்லப பந்த் மக்கள் சபையில் கூறினார். தீர்மானம் ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டது.

எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த ஒரு தீர்மானம், அரசாங்க எதிர்ப்பின்றி ஏகமனதாக மக்கள் சபையில் நிறைவேற்றப்படுவது, இதுதான் முதல் முறையாகும் என்பது கருதத்தக்கது.

அகதிகள் பிரச்சினையையும் உள்ளடக்கமாகக் கொண்டு குடிஉரிமை திருத்த மசோதா கூடியவிரைவில் இந்தியப் பேரரசால் உருவாக்கப்படும் என உள்நாட்டு அமைச்சர் விளக்கினார்.

மறந்துவிட்டனர்?

லண்டன், மார்ச் 5—

மார்ஷல் ஸ்டாலின் மறைந்த இரண்டாவது ஆண்டு நினைவு தினம், சோவியத் ரஷ்யா தவிர இதர நாடுகளில், விசேட வானொலி நிகழ்ச்சிகள் மூலம் நினைவுக்குக் கொண்டுவரப்பட்டன.

ஆனால் மாஸ்கோ வானொலியில் ஸ்டாலினைப் பற்றிய குறிப்பு, 'ஸ்டாலினும் கம்யூனிசப் பிரச்சினைகளும்' என்ற தலைப்பில் 'பிராவ்டா' இதழில் வெளிவந்த கட்டுரை மட்டும்தான் ஒலிபரப்பப்பட்டது என்று செய்திகள் கூறுகின்றன.

அந்தக் கட்டுரையிலும் ஸ்டாலின் இறந்த நாள் பற்றி எந்த விதக் குறிப்பும் இல்லையாம்!

நல்ல மகசூல்தான்!

ஜப்பானிய முறையில் சாகுபடி செய்து ஏக்கர் ஒன்றுக்கு 5,680 — பவுண்டு நெல் விளைவித்திருக்கிறார்—பாப்பாரக் கோணம் என்ற ஊரைச் சேர்ந்த பரமேஸ்வர குருப் என்ற விவசாயி!

அகதிகள் மறுவாழ்விற்கு ரூ. 19½ கோடி

நடைமுறை ஆண்டைவிட ஐந்தரை கோடி ரூபாய் கூடுதல்!

மேற்கு வங்கத்திற்கு மட்டும் ரூ. 13 கோடி பங்கீடு

1955-56-ம் ஆண்டில் அகதிகளுக்கு அளிக்கும் இந்தியப் பேரரசின் காணிக்கை

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடிவந்துள்ள அகதிகளின் மறு வாழ்விற்காக 1955—56-ம் ஆண்டிற்காக அதிகமான ஏற்பாட்டைச் செய்திருக்கிறது, இந்தியப் பேரரசு!

கிழக்குப் பகுதியில் குடியேறி உள்ள அகதிகளுக்கு மறு வாழ்வளிப்பதற்காக இனமாகவும், கடனாகவும் கொடுத்து உதவ

(4-ம் பக்கம் பார்க்க.)

பழைமை அழிகிறது! புதுமை மலர்கிறது!

அகமதாபாத், மார்ச் 6—

மெஹ்சான மாவட்டத்தில் வாழும் 'வகாரி' என்ற நாடோடிகளான பெண்கள் இனி நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்துக் கொள்வதாக முடிவெடுத்துள்ளனராம்.

தொன்றுதொட்டு உள்ள தங்களின் பழைமைபழக்கங்களிலிருந்து தாங்கள் விடுபட்டுவிட்டோம் என்பதன் அறிகுறியாகவே இனி அவர்கள் குங்குமப் பொட்டிட்டுக் கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள்.

இந்த முடிவு 'அலோல்' எனுமிடத்தில் நடைபெற்ற 'வகாரி'களின் பொதுக்கூட்டமொன்றில் மேற்கொள்ளப்பட்டதாம்.

இனி புகை பிடிப்பதில்லை என்ற மற்றொரு முடிவும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

'வகாரி' பெண்கள் பெரும்பாலானோர் கூலிகளாகவும், காய்கறி விற்பவர்களாகவும் வேலை செய்பவர்களாம்.

சென்னை நகரசபை - வரவு-செலவுத் திட்டம்

முதன் முறையாக தமிழில் வெளியாகியுள்ளது

சென்னை, மார்ச் 7—

சென்னை நகரசபையின் வரவு - செலவுத் திட்டம் இன்று மாலை சபைக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிகிறது. இந்த திட்டம் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

நகரசபையின் சரித்திரத்திலேயே முதன் முறையாக, வரவு-செலவுத் திட்டம் இப்போதுதான் தமிழில் வெளியிடப்படுகிறது.

சென்னை சட்டசபையில் அரசாங்க வரவு - செலவுத் திட்டத்தை தாக்கல் செய்து நிதிமந்திரி ஆற்றிய உரை ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்பட்டன.

ஆனால் நகரசபையோ, வரி விதிப்பு, நிதிக் குழு இவை மட்டுமின்றி, வரவு-செலவுத் திட்டத்தையே தமிழ் மொழியில் வெளியிட்டுள்ளது.

பேசுகிறார்கள்

லாகூர், மார்ச் 6—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிட்டது பற்றி அரசியல் நிர்ணய சபைத் தலைவருடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக, சௌத்ரி முகம்மது அலி, சுஹ்ரவர்த்தி, இஸ்கந்தர் மிர்ஜா என்ற மூன்று பாக். மந்திரிகளும் இன்று இங்கு வந்துள்ளனர்

பொருள் நூல் பெரும் புலவர் பிரிந்தார்

சென்னை, மார்ச் 7—

பிரபல பொருளாதார நிபுணரான டாக்டர் பி. வி. நாராயணசாமி (நாயுடு) ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் மாரடைப்பினால் இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் குறிப்பிடுகிறோம்.

அகில—இந்தியாவிலும் செல்வாக்குப் பெற்ற அரசியல் தலைவர்கள் திராவிடத்தில் இல்லாமலிருக்கலாம்; ஆனால், அகில இந்தியாவில் மட்டுமின்றி, உலக முழுவதிலும் செல்வாக்கும் புகழும் படைத்த அறிஞர்கள் பலர், பலப் பல துறைகளில் திராவிடத்தில் இருக்கிறார்கள்.

அத்தகு புகழும் செல்வாக்கும் படைத்த திராவிடச் செல்வங்களுள் ஒருவர்தான் டாக்டர் பி. வி. நாராயணசாமி அவர்கள்.

டாக்டர் பி. வி. நாராயணசாமி அவர்கள் தற்சமயம் இந்தியப் பேரரசு நியமித்த வாய்தா பேர குழுத் தலைவராக பணியாற்றி வந்தார்.

உத்தியோக அலுவலாக சௌராஷ்டிர மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்த அவர், ராஜ்கோட் வந்து சேருகையில் உடல் நலமாகவே இருந்திருக்கிறார்.

இரவு 11 மணியளவில் மார்வலி ஏற்பட்டிருக்கிறது; உடன் தேவையான சிகிச்சைகள் தரப்பட்டும், பலனில்லாதுபோய் விட்டிருக்கிறது.

மறுநாள் மாலை அவருக்கு பல சங்கங்களும், கழகங்களும் வரவேற்பும் விருந்தும் தரவிருந்திருக்கின்றன.

டாக்டர் நாராயணசாமி அவர்களின் பொருளாதாரப் பேரறிவு இந்தியத் துணைக்கண்டத்திற்கு பெரும் அளவு பயன்பட்டிருக்கிறது.

பொருளாதாரம் பற்றிய பல புத்தகங்களை எழுதிய மேதை அவர்.

டாக்டர் நாயுடு அவர்கள் இங்கிலாந்திலும் கல்வி பயின்றவர்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகவும், பின்னர் துணைவேந்தராகவும் இருந்து, திராவிடர்களுக்கு உழைத்த உத்தமர்.

பச்சையப்பன் கல்லூரியில் தலைமைப் பேராசிரியராகப் பணியாற்றி கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்தவர்.

பின்னர், சென்னை அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகராகவும் பணிபுரிந்தார்.

அடுத்து 1947 நவம்பரில் இந்திய காப்பு வரி போர்டு அங்கத்தினராக நியமனம் பெற்று சீரிய பணி செய்தார்.

இந்தியப் பேரரசின் யோசனையின் பேரில், டாக்டர் நாயுடு பங்கு மார்க்கெட்டுகள் வேலை நிலைமைபற்றி விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்தார்.

இதன் பிறகுதான் வாய்தா பேரக் 'குழு' தலைவராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வந்தார்.

எல்லோருடனும் இன்புறப் பேசிப் பழகும் தன்மையும் கடமையுணர்வும் கொண்ட டாக்டர் நாயுடு அவர்களுக்கு ஏராளமான நண்பர்கள் நாட்டின் பல பாகங்களிலுமுண்டு

டாக்டர் நாராயணசாமி அவர்கள் இயற்கையெய்தும்போது அவர் அருகே சௌராஷ்டிர முதன் மந்திரி, பர்ச், நிதி மந்திரி எம். என். ஷா, ரெவினியூ மந்திரி ரஜா ஆகியோரும், இதர அதிகாரிகளும் உடனிருந்தனர் என்று தெரிகிறது.

அவரது உடல், நேற்று மாலை சென்னைக்கு விமான மூலம் கொண்டுவரப்பட்டது.

இன்று இறுதிச் சடங்குகள் நடைபெறும்.

அவரது பிரிவு குறிப்பாக திராவிடத்திற்கும், பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திற்கும் பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது சோதரரான ரிசர்வ் பாங்கு மத்திய போர்டு டைரெக்டர் திரு. பி. டி. வி. ராமசாமி நாயுடு அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வேண்டுமென்றே - வேலையற்றிருப்போர்!

மைசூர் வேலை தேடித் தரும் நிறுவனம் குறிப்பிட்ட 300 உத்தியோகங்களில், எந்த ஒரு உத்தியோகத்தையும், அங்கு வேலையற்றிருக்கும் 20 எஞ்னியர்களில் ஒருவர்கூட ஏற்றுக்கொள்ள முன்வரவில்லையாம்.

அந்த வேலைகள் பஞ்சாப், பீகார், மத்திய பிரதேசம், பம்பாய் முதலிய மாநிலங்களில் உள்ளனவாம்.

இந்த வேலைகளில் ஒன்றை அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், பெயர்கள், குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று அந்த எஞ்னியர்களை வேலை தேடித்தரும் நிறுவனம் எச்சரித்துள்ளதாம்.

நம் நாடு

திமுக தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 7—3—1955 திங்கள்

கண்காணிக்க வேண்டும்!

மக்களின் பிரதிநிதிகள்—மக்களுடைய கருத்துக்களை, அவரவர்கள் இடம் பெற்றிருக்கும் சட்ட மன்றங்களில் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாவர்—ஜனநாயக மரபு கூறுகிறபடி!

அந்தப் பிரதிநிதிகள், தாங்கள் மக்களிடம் சென்று, குறிப்பிட்ட ஒரு ஆட்சி மன்றத்திற்கு தன்னைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு கோருகிற காலத்தில் மக்களுக்குத் தருகிற வாக்குறுதிகளை, தேர்ந்தெடுக்கப்பட்ட பின், தங்களாலியன்ற அளவு விசுவாசத்துடன் நிறைவேற்றிவைக்க வேண்டிய பொறுப்பும் பெற்றவர்கள் என்பது வெள்ளிடைமலை.

ஒரு குறிப்பிட்ட சட்ட மன்றத்தில்—அது பஞ்சாயத்து சபையாயினும், நகர சபையாயினும், சட்ட சபையாயினும், மத்திய மக்கள் சபையாயினும், இடம் பெற்றுள்ள மக்களின் பிரதிநிதிகள்—அவர்கள் ஆளும் பொறுப்பேற்றிருப்பவர்களாயினும் சரி—எதிர்க்கட்சியிலிருப்பவர்களாயினும் சரி—அல்லது உதிரிகளாக, சுயேச்சைகளாக இருந்தாலும் சரி—எல்லோருக்கும், மேற்கண்ட பொறுப்பு இருக்கத்தான் செய்கிறது.

மக்களின் பிரதிநிதிகளாயிருப்போர் இந்தப் பொறுப்பினை உணர்ந்து கொள்ளாமலிருப்பார்களானால், 'ஜனநாயகம்' வெற்றி பெறும் எனக் கூற முடியாது.

'சட்ட மன்றங்களில் இடம் பெற்றிருப்பவர்கள் பொறுப்பினை உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும்,' என்பதை வாக்காளர் பெருமக்கள் முன்கூட்டியே தெரிந்துகொள்ள வேண்டும் என்பதும் நியாயமாக இருக்கலாம்; ஆனால் இந்த நாட்டு மக்கள் எல்லோரும், அப்படி 'இவர் தகுதியுடையவர்தானா—நம்மை ஆள்வதற்கு?' என்று சிந்தித்து முடிவு மேற்கொள்ளும் நிலையில் வளர்ந்திருக்கிறார்கள் என்று எவருமே துணிந்து கூற முடியாது.

அந்த நிலையில், ஒரு குறிப்பிட்ட கட்சி அல்லது கொள்கை இவற்றைக் காட்டி, மக்களிடம் வாக்கு பெற்று, பிரதிநிதிகளாகச் சட்ட மன்றங்களுக்குச் செல்வோர்தான், தங்கள் பொறுப்பினை பெருமளவு உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்று நியாய உள்ளம் கொண்டோர் எதிர்பார்ப்பர்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மக்கள் சபை, பல்வேறு மாநில சட்டசபைகள், எண்ணற்ற நகர சபைகள் ஆகியவற்றில் இடம் பெற்றிருக்கும் மக்களின் பிரதிநிதிகளில் பெரும்பாலோனோர், தங்களுக்கு அப்படி ஒரு பொறுப்பு இருப்பதாக உணர்ந்துகொண்டிருப்பதாகவே தெரியவில்லை; கடந்த ஏழாண்டு காலமாக இங்கு இயங்கிவரும் பல்வேறு சட்ட மன்றங்கள் அதைத்தான் நமக்குக் கூறுகின்றன.

தேர்தல் காலத்திற்குமுன் மக்களிடம் தந்த உறுதிமொழிகளை உதாசீனம் செய்தோர், பதவிக்காக கட்சி மாறியவர்கள் இந்த நாட்டில் ஏராளம் ஏராளம்; உதாரணங்கள் சொல்லி அலுத்துப் போய் விட்டவர்கள் நாம்!

அதேபோல, மாதந் தவறாத சம்பளம் மட்டும் வாங்கிக்கொண்டு, ஐந்தாண்டுகளில் ஒரு நாள்கூட சட்ட மன்றத்திற்கு வராமல், மக்களின் பிரதிநிதிகளாயிருந்தோரும் உண்டு.

இப்போது சட்ட மன்றங்களில், 'நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு சட்டப்படி தேவையான அளவு உறுப்பினர்கள் வரவில்லை என்ற காரணத்திற்காக, சபை ஒத்தி வைக்கப்பட்டது,' என்ற வேதனையான செய்திகள் அவ்வப்போது வந்துகொண்டிருக்கின்றன.

'மக்கள் சபையில், ஒரு குறிப்பிட்ட மசோதா மீது வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு, அனேகமாக ஒவ்வொரு முறையும் மணியடித்தே அங்கத்தினர்களை சபைக்குள் வரவழைக்கிறார்கள்,' என்று, புதுடில்லிச் செய்தி ஒன்று கூறுகிறது.

சென்ற வாரத்தில் உத்திரப்பிரதேச சட்டசபையில் போதுமான அங்கத்தினர்கள் இல்லை என்பதற்காக சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்திருக்கிறார்கள்; அங்கு மொத்தம் உள்ள 431 உறுப்பினர்களில், 390 உறுப்பினர்கள், ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியினர்; இருபது நிமிடங்கள் ஓயாது, 'உள்ளே வாருங்கள்; உள்ளே வாருங்கள்' என்று மணியடித்தும், தேவையான 42 உறுப்பினர்கள்கூட சபைக்கு வராது போகவே, சபை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, நான்கு தினங்களுக்கு முன்புகூட டெல்லி சட்டசபையிலும் சபை ஒத்திவைப்பு நடவடிக்கை நடைபெற்றுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு, பம்பாயில், சட்ட சபை நடவடிக்கைகளின்போது ஒரு மந்திரிகூட இருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

கட்டாக் சட்ட சபைத் தலைவர், வரவு—செலவுத் திட்ட விவாதத்தின் போது, 'இனி எல்லா மந்திரிகளும் தவறாது வருகை தரவேண்டும்,' என்று மனம் நொந்து கட்டளையிடுகிற அளவுக்கு அங்கு 'மக்கள் பிரதிநிதி'களின் போக்கு இருந்து வருகிறது.

சென்னை சட்ட சபைகூட, இத்தகு சம்பவங்களுக்கு விதிவிலக்கல்ல!

இப்படி இந்தியத் துணைக் கண்டமெங்கும் உள்ள சட்ட மன்றங்களில் 'மக்கள் பிரதிநிதி'களின் பொறுப்பற்ற தன்மையை பொது மக்கள் உணர்ந்துதான் வருகிறார்கள்.

மக்களின் உழைப்பின் விளைவுகள், வரியாக வசூலிக்கப்பட்டு ஆட்சி நடைபெறுகிறது. அந்த ஆட்சி எப்படி நடைபெற வேண்டும் என்பதை மக்களின் பிரதிநிதிகளாயிருந்து நிர்ணயிக்க வேண்டியவர்கள் சட்டசபை, மக்கள் சபை உறுப்பினர்கள்.

மக்களுக்கான சட்டங்களை உருவாக்கவும், திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றும் காரியமாற்றவும்தான் சட்ட மன்றங்கள் இருக்கின்றன.

ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்தான் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருப்பதால், அவர்கள், இதர அங்கத்தினர்களுக்கு ஒரு முன் மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும். அதைத்தான், இயற்கையாகவே எவரும் எதிர்பார்ப்பர்.

ஆனால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் காங்கிரஸ் கட்சியினரோ, அப்படி முன் மாதிரியாக இல்லாதது மட்டுமல்ல — பொறுப்பையே உணராதவர்களாயிருக்கிறார்கள்!

மக்களின் வியர்வைத் துளிகளின் மறு உருவான வரிப்பணம் லட்சக் கணக்கில் செலவிடப்பட்டு, சட்ட சபைகள் நடத்தப்படுகின்றன; அந்தச் சட்டசபைகள், யாருக்காகக் கூட்டப்படுகின்றனவோ அந்த மக்களின் பிரதிநிதிகள், சட்டசபைக் கூட்டங்களுக்கு வராமல் போய்விடுவதால் சபைகள் ஒத்திவைக்கப்பட்டு, மக்களின் வரிப் பணம் வீணாக்கப்படுவது வருந்தத்தக்கதுமட்டுமல்ல—வன்மையான கண்டனத்திற்கும் உரியதாகும்.

மக்கள், தங்கள் தங்கள் தொகுதி பிரதிநிதிகளைப் பற்றி—அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராயினும்—அவரது சட்டசபை நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

ஆந்திரத் தேர்தல்

அமெரிக்காவின் மகிழ்ச்சி

ஆந்திராவில் கம்யூனிஸ்டுகள் தோல்வி கண்டது அமெரிக்காவிற்கு உச்சியைக் குளிர வைத்திருக்கிறதாம்.

அந்த நாட்டுப் பத்திரிகைகள் பல, கம்யூனிஸ்டுகளை வென்ற காங்கிரசையும், பண்டித நேருவையும் பாராட்டி எழுதியிருக்கிறனவாம்!

25 டெல்லி மந்திரிகள் வந்தனராம்!

"ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு புதுடில்லியிலிருந்து மத்திய அரசாங்க உதவி மந்திரிகள், மந்திரிகள் ஆகியோர் 25 பேர் வரை சென்றிருந்தனர்; அவர்கள், தங்கள் சொந்தச் செலவிலேயே மாநாட்டிற்கு வந்து சென்றனர்," என்று உதவி உள்நாட்டு மந்திரி தத்தார், தோழர் வீராசாமியின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜெர்மன் பொலிகாளைகள் இந்தியா வருகின்றன

அமெரிக்கப் பாதிரிகள் சங்கம் இந்தியாவுக்கு அளித்துள்ள 6—உயர்தர ஜெர்மன் பொலி காளைகள், விசேட விமானமொன்றில் பறந்து வருகிறதாம். நாடு பூராவிலும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் காரியத்திற்காக இந்த பொலி காளைகள் பயன்படுத்தப்படுமாம்.

புராணப் புத்தகங்கள் படிப்பகங்களை விட்டு அகலும்?

"கடவுளரின் ஆண்-பெண் உறவு பற்றிய கதைகள் ஆபாசம் மிகுந்தவை"

பம்பாய் நகர சபையின் தீர்மானம்!

"ஆட்சேபனைக்குரிய ஆபாசமான கருத்துக்களடங்கிய புத்தகங்களை நகரசபை நடத்தும் படிப்பகங்களிலிருந்து நீக்கிவிட வேண்டும்," என்று, ம. சோ. கட்சியினர் கொண்டுவந்த தீர்மானம் ஒன்றை பம்பாய் நகரசபை நிறைவேற்றியுள்ளது.

கடவுளர்களின் ஆண்-பெண் உறவு வாழ்க்கை பற்றிய மிக ஆபாசமான கருத்துக்களடங்கிய ஏராளமான புராண—சாஸ்திர—இதிகாச புத்தகங்கள், நகரசபை வாசக சாலைகளில் இருப்பதாக தீர்மானத்தைக் கொண்டுவந்த பேராசிரியர் ராம் ஜோஷி குறிப்பிட்டிருக்கிறார்.

நகரசபை ஆணையாளரான பி. ஆர். பி. நாயக், இந்தப் புத்தகங்கள் எல்லாம், நகரசபையால் தேவை என வாங்கப்பட்டவை அல்ல என்றும், ஆனால், அவைகளில் பல, வாசகசாலைகளுக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டவை என்றும் கூறியிருக்கிறார்.

தீர்மானம் பற்றி தாம் கவனிப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

திரு-கொச்சி போலீசாரின் மிதமிஞ்சிய போக்கு

நடவடிக்கை எடுப்பதாக முதன் மந்திரி உறுதி

திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன், போலீசாரின் சட்டத்திற்கு மீறிய செயல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு தலைவர்கள், 'போலீசார் தொழில் தகராறுகளில் தலையிடுவதாகவும், சில இடங்களில் தொழிலாளர்களிடத்தில் மிருகத்தனமாக போலீசார் நடந்துகொண்டதாகவும் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

குறிப்பாக, இப்போது குட்டிநாடு வயல் வெளிகளில் நடைபெற்று வரும் தொழிலாளர் கிளர்ச்சிகளில் போலீசாரின் நடவடிக்கை மிதமிஞ்சியதாக இருக்கிறது என்றும் கம்யூனிஸ்டுகள் குறிப்பிட்டிருக்கின்றனர். இதன் பிறகே முதன் மந்திரி மேற்கண்ட உறுதிமொழியைத் தந்திருக்கிறார்.

சுற்றத்திற்கு உற்றதல்லவா?

ஆமதாபாத், மார்ச் 3—

பம்பாய் அரசாங்கம் ரூ. கோடி 55 லட்சம் செலவில் 3345 வீடுகளும், 100 கடைகளும் நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டும் என்றும், அவை, அமைச்சர்களுக்காக அவர்களின் காலனிகளில் அமையும் என்றும் கூறப்படுகிறது.

இதுவரையில் அமைச்சர்களுக்கான அபிவிருத்தி வேலைகளுக்கும், நிர்மாண வேலைகளுக்கும் ரூ. 6 கோடி 72 லட்சம் பம்பாய் அரசாங்கம் செலவிட்டுள்ளது.

சத்தியமூர்த்தி நகர்...

இரயில் நிலையம் அமைப்பிற்காக 3 லட்சம் செலவிடப்பட்டதாம்!

ஆவடியில் அமைக்கப்பட்ட சத்தியமூர்த்தி நகருக்கென தனி புகை வண்டி நிலைய அமைப்புக்காக ரூ. 3 லட்சம் செலவிடப்பட்டதாக, மக்கள் சபையில், தோழர் வீராசாமியின் கேள்விக்கு பதில் கிடைத்திருக்கிறது.

சட்ட பூர்வமான வருமானம்

"வெளிநாடுகளில் வசிக்கும் சீனர்கள், தாயகத்தில் உள்ள தங்கள் குடும்பத்தாருக்கு அனுப்பும் பணம், அந்தக் குடும்பத்தின் சட்ட பூர்வமான வருமானமாகும்; அதைத் தடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்,' என்று பிரதமர் சௌ-என்-லாய் கையொப்பமிட்டுள்ள உத்திரவு ஒன்று வெளியாகி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பக்ரா நங்கல் - அணைக்கட்டு

40 கோடி ரூபாய் - பாழடிக்கப்பட்டதாம்!

பஞ்சாப் சர்க்கார் மீது குற்றச்சாட்டு

சாந்திகர், மார்ச் 3—

பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில், பெரும் அளவு மோசடிகள் நடைபெற்றிருக்கின்றன என்று பஞ்சாப் அரசாங்கத்தின் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

பஞ்சாப் சட்டசபையில், கவர்னரின் உரை மீது நடைபெற்ற விவாதத்தின்போது இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

'சாந்தி ஜனதா கட்சி' என்ற கட்சியினைச் சார்ந்த பாபு தயால் சர்மா என்பவர், "இந்தத் திட்டத்தில் ரூ 40 கோடி விரயமாக்கப்பட்டிருப்பதாயும்; இது, அவமான சரித்திரத்திற்கு அழியாத சின்னமாகும்," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பாக். அ. நி. சபை கலைப்பு எதிரொலி

சமரசம் காண முடிவு?

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை தன்னைத்தானே கலைத்துக் கொண்டுவிட வேண்டுமென்றும், தேர்தலை விரைவில் நடத்துவதற்கு சர்க்கார் சம்மதிக்க வேண்டுமென்றும் பாக். பெடரல் கோர்ட் நீதிபதி அறிவித்துள்ள சமரசப் பிரேரணைகளைக் குறித்து, கராச்சியில் உயர்தர வட்டாரங்களிடையே விவாதங்கள் நடைபெறுகிறதென்றும், பாக். சர்க்காரின் அப்பீலை பெடரல் கோர்ட் பைசல் செய்வதற்கு முன், கோர்ட்டுக்கு வெளியே சமரசம் காணுவதென்று மந்திரி சபை குழுவினர் முயலுகின்றனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

தாராள மனது!

"சாதாரண இரயில் வண்டிகளில் 50 மைல் வரையில் பிரயாணம் செய்பவர்களுக்கு எவ்விதக் கட்டண உயர்வும் இராது," என்று மக்கள் சபையில் ரயில்வே மந்திரி அறிவித்தார்.

கழகச் செய்திகள்

கோவை நகர தி. மு. கழக செயற்குழு கூட்டம்

22—2—55 காலை 11 மணிக்கு கழக அலுவலகத்தில் தோழர் அ. பழனிசாமி தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது 20—2—55ல் நடைபெற்ற பொதுக்குழு கூட்ட வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு வரவு ரூ. 510—6—0; செலவு ரூ. 495-12-0; இருப்பு ரூ. 14-10-0 ஒப்புக்கொள்ளப்பட்டது.

19—2—55ல் நடைபெற்ற சிறப்புக்கூட்ட வரவு ரூ. 383-1-0; செலவு ரூ. 292—6—0; இருப்பு ரூ. 90-11-0 சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது. மற்றும் கழக நிர்வாக சம்பந்தமாக சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

தாராபுரம் வட்ட தி. மு. க.

வட்டக்குழு அமைப்புக் கூட்டம்

24-2-55 பிற்பகல் 3 மணிக்கு, மேற்படி அமைப்புக் கூட்டம் மூலனூர் தி. மு. க. பணி மனையில் தோழர் எஸ். எம். பழனிசாமி தலைமையில் நடைபெற்றபோது, வட்டக் குழுவின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : கோதை பொன்னப்பா ; துணைச்செயலாளர் : கே. எஸ். நாச்சிமுத்து ; பொருளாளர் : ந. சின்னமுத்துசாமி ; பொதுக்குழு உறுப்பினர் : கே. எஸ். சீரங்கராயர்; மாவட்டப் பிரதிநிதி: எஸ். வி. சர்க்கரை.

முகவூர் தி. மு. கழகம்

25—2—55 இரவு 10 மணிக்கு, தோழர் மீ. அழகப்பன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் வளர்ச்சி குறித்து தோழர் வி. எ. சுப்பையா எஸ். மணிகண்டன், வி. எ. முத்தையா, பொ. நாராயணன், மு. மாரியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், பேரூர் பொதுக்குழு தீர்மானப்படி 20-3-55ல், 'ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்' கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சிறுகளப்பூரில் தி.மு. கழக துவக்க விழா

திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் பெருவளப்பூர் பிர்காவிலுள்ள சிறுகளப்பூர் கிராமத்தில், 25—2—55-ல், தோழர் இரா. முத்துசாமி அவர்கள் தலைமையில் தி. மு. கழகத் துவக்க விழாவாற்றப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: ம தங்கையா; துணைச் செயலாளர்: சு. முத்துசாமி; பொருளாளர்: பி முத்துகிருஷ்ணன்.

கோதைமங்கலம் தி. மு. க. துவக்க விழா

26—2—55 மாலை 7 மணி அளவில் அடிகள் சிவநேசம் தலைமையில், கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் டி. கே. சீனிவாசன் சமுதாயம் சீர்திருந்த வேண்டிய அவசியம் பற்றியும், தோழர் மே. சி. சிதம்பரனுர் ஆவடி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சோஷலிசம் பற்றியும் விளக்கவுரை ஆற்றினர்.

குரும்பேரி தி. மு. கழகம்

26—2—55 இரவு 8 மணிக்கு நடைபெற்ற கழக செயற்குழுக் கூட்டத்தில், பேரூர் பொதுக் குழுவின்படி, 20-3-55ல 'ஐந்தாண்டு திட்ட கண்டனக் கூட்டம்' நடத்துவதென முடிவு செய்யப்பட்டதுடன், செயற்குழு உறுப்பினராகத் தோழர் கந்தசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருமங்கலம் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

27—2—55 மாலை 6-30 மணியளவில் பர்தடித் திடலில் தோழர் மைதீன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தற்கால அரசியல் நிலை குறித்து, தோழர்கள் இரசாக், பிச்சை ஆகியோர் பேசிய பின்னர், மதுரை தோழர் கே. எஸ். சந்தானம் சொற்பொழிவாற்றினர்.

பொன்னமராவதியில் தி.மு. கழகப் பொதுக் கூட்டம்

27—2—55 மாலை கழகச் சார்பில், அண்ணு திடலில், தோழர் நல்ல சுப்பையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நல்லமணியன் முத்துக்கலிங்கன், சந்திரன் ஆகியோர் பேசிய பின், தோழர் க. அன்பழகன் பேசினர். பொன்னமராவதி கடலைக் கடைத் தொழிலாளர் கழகச் சார்பில் அவருக்கு கைத்தறித் துண்டு அணிவிக்கப்பட்டது.

அரக்கோணம் நகர தி. மு. கழகம்

28—2—55 மாலை 7½ மணிக்கு தோழர் வி. டி. சாமி தலைமையில், கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பேரூர் பொதுக் குழு முடிவின்படி, 20—3—55ல் 'ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்' நடத்துவதென முடிவு செய்யப்பட்டதுடன், தோழர்கள் என். நாகரத்தினம், கே. கன்னியப்பன் விலகுதலை ஏற்றுக்கொண்டு, தோழர் வி. டி. சாமி அவர்களை பொருளாளர் பதவியுடன் பொறுப்பாளர் பதவியையும் ஏற்று நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அம்மாசத்திரம் தி. மு. கழகம்

24—2—55 இரவு 7 மணிக்கு தோழர் மு. கந்தசாமி தலைமையில் கழகச் செயற் குழு கூட்டம் நடைபெற்றபோது, விரைவில் ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், இது சம்பந்தமாக ஆவன செய்ய குழு ஒன்றும் நியமித்தும் முடிவு செய்யப்பட்டது

செங்காட்டுபட்டி தி. மு. க.

1—3—55 இரவு 9 மணிக்கு அண்ணு அறிவகத்தில், தோழர் க. சி. அரங்கசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், பிரதி ஞாயிறுதோறும் சொற்போர் பயிற்சி கூட்டம் நடத்துவதென்றும், பேரூர் பொதுக் குழு முடிவுகளை வரவேற்றும், 20—3—55ல், 'ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம்' நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

வேலூர்-சேலம் தி. மு. க.

1—3—55 இரவு 10 மணிக்கு தோழர் வி. எ. இராமநாதன் தலைமையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் கண்ணதாசன் தந்தையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் 10-2-55ல் நடைபெற்ற பொதுக் கூட்ட வரவு-செலவு ஒப்புக்கொள்ளப்பட்டும், பேரூர் பொதுக்குழு தீர்மானப்படி 20—3—55ல் 'ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம்' நடத்துவதெனவும் முடிவுகள் செய்யப்பட்டதுடன், புதிய செயற்குழு உறுப்பினராக தோழர் கே. காசிலிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னை புளியந்தோப்பு தி. மு. கழகம்

அண்மையில், தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், சமீபத்தில் நடைபெறப் போகும் பொதுச் செயலாளர் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் பற்றி யோசிக்கப்பட்ட பின், முடிவுகள் சில செய்யப்பட்டன.

அழிக்கும் அணுசக்தி மனிதனின் ஆற்றலுக்கு அடங்கிவிட்டது!

நோய்க் கூறுகளை அறிய உதவுகிறது; கொடிய கிருமிகளைக் கொல்லுகிறது!

"அழிக்கும் திறன் படைத்த அணுசக்தி இப்போது மனிதனுக்கு அடங்கி, ஆக்க வேலைகளுக்குப் பயன்படத் தொடங்கி விட்டது.

"பொதுவாகவே, மருத்துவத் துறையில் அணுக் கதிரியக்க 'ஐசோடோப்பு'கள் பல பரிசோதனைகளுக்கும் இன்றியமையாத் தேவையான சாதனமாகிவிட்டன.

"இந்த 'ஐசோடோப்பு'கள், உடலில் கண்டுள்ள நோய்க் கூறுகளை அறிந்துகொள்ளவும், இரத்த ஓட்டத்தைக் கணிக்கவும், இதயத் துடிப்பைக் கணக்கிடவும் பயன்படுகின்றன."

உதாரணமாக, அணுக்கதிர் வீச்சுள்ள 'அயோடின் ஐசோடோப்பு'களை 'பிளாஸ்மா' எனும் புதைப் பொருளுடன் கலந்து இரத்த நரம்பில் ஊசிமூலம் ஏற்றுவதால் இரத்தக் கோளாறுகளையும், இதய நோய்களையும் தவிர்க்க முடியும். தற்போது லண்டனிலுள்ள மருத்துவர்களெல்லாம் மனிதனது இரத்த ஓட்டத்தைக் கணிக்கவும், இதயத் துடிப்பை அளக்கவும் இதைப் பயன்படுத்துகிறார்கள்.

அணுகுண்டு வெடித்த பிறகு அதிலிருந்து வெளியாகும் அணுக் கதிர்களிலிருந்து சில தாதுப் பொருள்கள் வெளியாகின்றன; அவைகளிலொன்றுதான் அரிசி எடையுள்ள இரசாயன 'ஐசோடோபு' என்பது!

"மருத்துவச் சிகிச்சைகளில் 'ஐசோடோப்பு'கள் மிகவாகப் பயன்படுகின்றன. 'எக்ஸ்—ரே' கிரணங்களை வீசும் குழாய்களை, புற்று நோய்க்கும் (கான்சர்), மற்றும் பல விஷக் கிருமிகளைக் கொல்லவும் உபயோகிக்கிறார்கள்.

"எக்ஸ்-ரே கிரண சிகிச்சை மூலம் இவ்வியாதிகளைத் தவிர்க்கலாமென்றாலும், அதிலும் ஒரு சிரமம் இருக்கிறது. அதாவது உடலில் விஷக் கிருமிகளால் தாக்கப்பட்டு புண்பட்ட திசுக்களில், 'நோயுற்ற பகுதி இது—நோயுறாத பகுதி இது' என்று பாகுபடுத்தி சிகிச்சை செய்ய முடியாதது தான். சில சமயங்களில நோயுறாமல் ஆரோக்கியமாகவே இருக்கும்பகுதிகளில் 'எக்ஸ்-ரே' கிரணங்கள் படுவதால் அப்பகுதிகளுக்கு ஊறு நேரிடுகின்றன.

ஆனால், 'ஐசோடோப்பு'களை உபயோகிப்பதால் இவை நேரிடுவதில்லை. உதாரணமாக 'தைராய்ட்' சுரப்பியில் புற்றுநோய் ஏற்பட்டாலும், சதை வளர்ந்தாலும் அணுக் கதிர் வீச்சுள்ள 'அயோடின் ஐசோடோப்பு'களை நீரில் கலந்து உட்கொள்வதானல் ரணமுள்ள பகுதி மட்டும் நோய் நீக்கப்பெறுகிறது. மற்றப் பகுதிகளில் எவ்விதத் தீங்கும் ஏற்படுவதில்லை.

ஆனல் நுரையீரலில் புண் ஏற்பட்டால் இவ்வித 'ஐசோடோப்பு'கள் பலன் தருவது கிடையாது. ஆகவே தனி முறை—தனிப் பொருட்களைக் கண்டுபிடிக்க மருத்துவ விஞ்ஞானிகள் முனைந்திருக்கின்றனர்.

அதன் விளைவாகத் தற்போது அணுக்கதிர் இயக்க தங்கத் தாதுக்களைக் கலந்து இரத்த நரம்பில் மருந்தாக ஊசி மூலம் செலுத்தப் படுகிறது. இவ்வாறு அணுக்கதிர் வீச்சுப் பெற்ற தாதுக்கள் இரத்தத்தின் மூலம் நுரையீரலை அடைந்து நோயுற்ற பாகங்களை மட்டும் தாக்குகின்றன. இது இன்னும் ஆராய்ச்சியில்தான் இருக்கிறது.

செய்திச் சுருள்

★

சௌந்திரபாண்டியனர் நினைவுப் படிப்பகம் திறப்பு

கோட்டார்—வைத்தியன் விளையில், 25—2—55 காலை 8 மணியளவில், தோழர் வி. கிருஷ்ணன் தலைமையில் மேற்படி படிப்பகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

அன்று மாலை 3 மணிக்கு, தோழர் கே. நீலகண்டன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், மாலை 5 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் படிப்பக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை சிலம்பு மன்றம்

25-2-55ல், திருவல்லிக்கேணியில், தோழியர் ஜி எ. திலகவதி தலைமையில் நடைபெற்ற மன்றச் சிறப்புக் கூட்டத்தில், "சிலம்பு" என்னும் பொருள் பற்றி தோழர் மகாலிங்கம் பேசியபோது, "சிலப்பதிகார நிகழ்ச்சிகள் ஊழின் அடிப்படையில் நிகழ்கின்றன," என்றும், அவர் துணைவியார் தோழியர் கனகசுந்தரி "சிலம்பின் நிகழ்ச்சிகள் ஊழின் துணையில்லாமலேயே நடைபெறுகின்றன" என்றும் கூறினர்.

தோழர் ஆறுமுகனுர் சிலம்பின் சிறப்புக்களைக் கூறினர் தலைவர் அவர்கள், "சிலம்பின் நிகழ்ச்சிகள் யாவும் கலையார்வம் அல்லது கலைப் பித்தால் அமைந்துள்ளன," என்ருர்.

பெயர் சூட்டு விழா

27—2—55ல், மதுரை தி மு கழகத் தோழர் ஆ இரத்தினம்—தோழியர் குரு தம்பதிகளின் ஆண் மகவுக்கு தோழர் முத்துக்குமார் தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெற்றது. குழந்தைக்கு 'சீர் திருத்தம்' என்ற பெயர் தலைவரால் சூட்டப்பட்டது.

தோழர்கள் : எஸ். முத்து, மு வசனப்பித்தன், சுவாமிநாதன், முருகு செழியன், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கின., நிகழ்ச்சியில் ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டு வாழ்த்துக்களையும் பரிசுகளையும் வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 5 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்ருேம் — நன்றி — பொறுப்பாளர்.

பாலையம்பட்டி தி. மு. க.

1—3—55ல், 'மகிழ்ச்சி மன்ற'த்தை தி மு கழகமாக மாற்றி அமைத்து பல தீர்மானங்களுக்குப் பின், நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: ஏ. எஸ். ஏ. சாமி; துணைச் செயலாளர்: என். சுப்பையா; நிதிக் காப்பாளர்: எம். பொன்னிருளன்; விளம்பர உறுப்பினர்: ஜி இராமசாமி இறுதியில் கழக நிதிக்காக ஒரு நாடகம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

கொண்டலாம்பட்டி தி. மு. கழகம்

1—3—55ல் நடைபெற்ற கழக செயற்குழுக் கூட்டத்தில், கழக ஆண்டுவிழாவை ஏப். 10-ந் தேதியன்று நடத்துவதென முடிவு செய்து, அதற்கான ஐவர்கொண்ட குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், 20—3—55ல், 'இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் கண்டன நாள்' கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஜம்மு — காஷ்மீர் சட்டசபையில்

புதிய எதிர்க் கட்சி உதயம்

முன்னுள் மந்திரி தலைவராகிருர்!

ஜம்மு—காஷ்மீர் சட்டசபையில் எட்டு அங்கத்தினர்கள் கொண்ட புதியதொரு எதிர்க் கட்சி அமைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஷேக் அப்துல்லா மந்திரிசபையில் ரெவினியூ மந்திரியாயிருந்த மீர்ஜா அப்ஸெல் பெக் என்பவரின் தலைமையில் அது இயங்கும் என்றும் கூறப்படுகிறது.

'சோஷலிஸ்ட் ஜனநாயக முன்னணி' என்ற பெயர் கொண்ட அந்தக் கட்சி, இன்னும் தனது திட்டங்களை அறிவிக்காவிட்டாலும் சபைத் தலைவருக்கு தாங்கள் ஒரு தனி எதிர்க் கட்சியாக இயங்கப்போவதாக அறிவித்துள்ளனராம்.

இப்போதுள்ள சட்டப்படி குறைந்தது 11 பேர்களாவது இருந்தால்தான் தனி எதிர்க் கட்சியென சபைத் தலைவர் அங்கீகரிப்பார்; ஆனல், மாநிலத்திலேயே இந்த மாதிரி உள்ள கட்சி இதுவே முதலாவதாக இருப்பதால், சட்டம் திருத்தப்படுமா என்பது இன்னும் தெரியவில்லை.

மதுரை அறிவு வளர்ச்சி படிப்பகம்

மதுரை ஆட்டுமந்தை பொட்டல் தெருவில் இருந்த இப்படிப்பகம் 1—3—55 முதல் கரீம்சா பள்ளி வாசல் சந்தில் மாற்றப்பட்டு, காலை 10 மணியளவில் தோழர் எஸ். எம். யாகூப் தலைமையில் திறப்புவிழா நடைபெற்றது. பின்னர், பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களின் உருவப் படத்தை தோழர் மு. காதர் திறந்துவைத்து பேசியபின், பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

பட்டீச்சுரம் திராவிட இளைஞர் மன்றம்

3—3—55ல் நடைபெற்ற மன்றச் செயற்குழு கூட்டத்தில் கும்பகோணம் தாலூகா பட்டு நெசவுத் தொழிலாளர் கோரிக்கைக்கு ஆவன செய்து தருமாறு அரசினரைக் கோரியும், தொழிலாளரின் போராட்டத்தை ஆதரித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கொங்கு மண்டல வேளாளர் மாநாடு

சேலம், மார்ச் 3—

வரும் ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் இம்மாநாடு நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளை நாமக்கல் தோழர் கே. பெருமாள் செய்து வருகிறார். மாநாட்டில் பல, எம். எல். ஏ. -க்களும், எம். பி. -க்களும் கலந்துகொள்ள இருக்கிறார்கள். மாநாட்டு சம்மந்தமாய் விவரம் வேண்டுவோர் அமைப்பாளருக்கு எழுதிக்கொள்ள வேண்டப்படுகிறது.

மறுப்பு

"நாடகங்கள் மூலமாகவும், கூட்டங்கள், திருத்திய திருமணங்கள் வழயாகவும் தி. மு. கழகக் கொள்கையை இயன்ற அளவுக்கு பரப்பி வரும் நான், கொள்கை பிடிக்காத காரணத்தால் தி. மு. கழகத்திலிருந்து விலகிவிட்டதாக உள்ளூர்—வெளியூர்ச் செய்தித் தாள்களில் பெங்களூர் தெய்வநெறி மன்றத்தார் பொய்ச் செய்தி தந்து புரளியை வளர்த்துள்ளார்கள் என்பதைக் கண்டு வருந்துகின்றேன்.

"இப்போதும் நான் தி. மு. க. உறுப்பினன்தானென்றும், இனியும், தி மு கழக வளர்ச்சிக்காகவே பணியாற்றுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று, பெங்களூர்—ப செல்வராசன் அறிவிக்கிருர்.

இங்கிலாந்து இளவரசி வாழ்க்கைப் போர்?

காதலா? அந்தஸ்தா? என்பதில் முடிவு காணும் உள்ளக் குமுறல்

பெரிய தந்தையின் வழி செல்லுவாரோ என அச்சம்!

லண்டன், மார்ச் 7—

இங்கிலாந்து இளவரசி மார்கரெட் இப்போது தனது வாழ்க்கையிலேயே மிகப் பெரியதொரு பிரச்சினைக்கு முடிவு காண வேண்டிய நெருக்கடியிலிருப்பதாகத் தெரிகிறது.

கடந்த இரண்டாண்டுகளாகவே இளவரசியார், 'பீட்டர் டௌன்சென்ட்' என்ற இராணுவ அதிகாரி ஒருவருடன் காதல் புரிவதாக வதந்திகள் வெளியாகிக்கொண்டிருந்தன.

இத்தகைய வதந்திகளை மறுப்பதோ, உறுதி செய்வதோ 'தேவாலய' அதிகாரிகளின் வழக்கமல்ல!

ஒரு பெரும் சாம்ராஜ்யத்தின் அரசபோக உரிமைகளை இழந்துவிட வேண்டாமென அந்த இளவரசிக்கு, காண்டர்பரி தேவாலயத்தவர் எவ்வளவு தூரம் எடுத்துக் கூறினர் என்ற விவரமும் தெரியவில்லை.

இளவரசி இந்தப் பிரச்சினையை முழுவதும் நன்றாக, தீர்க்கமாக சிந்தித்து முடிவெடுப்பதற்காகவே, அவரை மேற்கிந்தியத் தீவுகளுக்கு அண்மையில் அனுப்பி வைத்தனராம்.

அங்கு இளவரசி மார்கரெட்டை அனுப்புகையில், இளவரசி ஒரு நல்லெண்ணத் தூதுவராகவே அங்கு செல்வதாக மட்டும்தான் அறிவிக்கப்பட்டதேயன்றி, யாருடைய அழைப்பின் பேரில் இளவரசி அங்கு செல்கிறார் என்பது பிரிட்டன் மக்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

இளவரசி, மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு தாயகம் திரும்பியாகி விட்டது; ஆனாலும், இளவரசி தனது பெரியப்பாவான எட்டாம் எட்வர்டு, காதலுக்கு தந்த முடிவையே தாமும் மேற்கொள்ள துணிந்துவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

தான் காதலித்தவரைக் காட்டிலும் அரச போகமும், அரண்மனை வாழ்வும் பெரிதல்ல என்றெண்ணுகிறாராம், இளவரசியார்!

இளவரசியின் இந்த முடிவு அரண்மனை வட்டாரத்தில் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளதாம்!

25-வது வயதில் இங்கிலாந்து இராணியின் அனுமதியின்றியே தனது காதலரான பீட்டர் டௌன்சென்ட் என்பாரை மணந்துகொள்ளப் போவதாக தமது கருத்தை வெளியிடக்கூடும் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது.

வருகிற ஆகஸ்டு மாதத்தில்தான் மார்கரெட்டிற்கு 25 வயது வரும். பின்னரும், 12 மாதங்கள் திருமணத்திற்காகக் காத்திருக்க வேண்டியிருக்குமாம்!

மக்கள் சபைக்கும் இளவரசியின் திருமணம் குறித்து அறிவிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்.

முதலில் இளவரசி, 'தனக்கும், தன் குழந்தைகளுக்கும் இங்கிலாந்து அரச குடும்பத்தில் உள்ள வாரிசு உரிமைகளைக் கோரமாட்டேன்,' என்று உறுதியளிப்பார். (இதற்காக மக்கள் சபை ஒரு சிறு சட்டம் இயற்றும்.)

இரண்டாவதாக, இளவரசி டௌன்சென்டை மணந்து கொள்வதற்கு, இராணி தனது அனுமதியைத் தருவார்.

பின்னர், ஸ்காட்லாந்தில் உள்ள செயின்ட் கில்ஸ் கதீட்ரலில் திருமணம் நடைபெறும். இங்கு திருமணம் நடைபெறுவதற்குக் காரணம், காண்டர்பரி ஆர்ச்பிஷப்பின் அதிகார எல்லைக்கு அப்பால்தான், இத்தகைய திருமணங்கள் நடைபெற வேண்டுமாம்!

காண்டர்பரி ஆர்ச்பிஷப், இத்திருமணத்திற்கு உடந்தையாயிருக்க முடியாததற்குக் காரணம், டௌன்சென்ட் ஏற்கனவே ஒரு பெண்ணை மணந்துகொண்டு, அவளுடன் மண விலக்கு செய்து கொண்டவர்; அந்த முதல் மனைவிக்கு, 12 வயதிலும், 9 வயதிலும் இரு ஆண்பிள்ளைகள் இருக்கின்றனராம்.

திருமணத்திற்குப் பின் சில நாளாவது இருவரும் கானடாவில் வசிப்பார்களாம்.

டௌன்சென்ட் அரச குடும்ப இராணுவ அதிகாரியாக இருந்தார் அப்போது இளவரசி மார்கரெட்டுடன் அவர் அடிக்கடி, அதிகாரபூர்வமான நிகழ்ச்சிகளில் காணப்பட்டார். இருவரும் கடந்த இரண்டாண்டு காலமாகவே சேர்த்துப் பேசப்பட்டனர்.

இந்தத் தகவல் கிடைத்ததுமே, டௌன்சென்ட், பிரஸ்ஸெல்ஸ் நகரில் உள்ள பிரிட்டிஷ் தூதுவராலய விமானப் போக்குவரத்து அதிகாரியாக மாற்றப்பட்டாராம்.

ஆனாலும், காதலனைப் பிரித்து வேறிடம் அனுப்பி விட்டதினாலேயே, உள்ளம் காதலை மறந்து விடுமா என்ன?

மார்கரெட் அவரை மணந்து கொள்ளக்கூடாது என்பதற்கான ஆட்சேபமெல்லாம், டௌன்சென்ட் ஏற்கனவே ஒருத்தியை மணந்துகொண்டு, மணவிலக்குப் பெற்றவர் என்பதுதான்.

இவ்வளவு விஷயங்கள் வெளியான பிறகும்கூட, கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் ஒருவர், இவையெல்லாம் வெறும் வதந்திகள் என்றும், இளவரசி அரச போகத்தையும், அந்தஸ்தையும் அரண்மனை வாழ்வையும் வெறுத்து விடத் துணியமாட்டார் என்று கூறுவதாகவும் தெரிகிறது.

நெய்க்கும் பஞ்சம்?

அமெரிக்காவிலிருந்து இந்தியா தருவிக்கும்

ஜூலை — ஆகஸ்டு மாதத்தில், 500 டன் நெய் அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்குக் கிடைக்கும்.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் பசு நெய் விலை அதிகமாக இருக்கிறதாம்; எனவே முதலில் கிடைக்கும் 500 டன் அமெரிக்க நெய்யும் இந்த நகரங்களில் விற்கப்படுமாம்.

இந்த நெய்யில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, இந்திய சர்க்கார், சீலிடப்பட்ட டின்களில் இந்த நெய்யை இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளனராம்.

கோகலேமண்டபத்தில் சிறப்பு சொற்பொழிவு

"சென்னை தி. மு. கழகச் சார்பில் 13—3—55 அன்று காலை 9 மணிக்கு கோகலே மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தின்போது திருவள்ளுவர் நூல் நிலையத்தாரால் விற்பனை செய்யப்பட்டிருக்கும் அனுமதிச் சீட்டு (டிக்கெட்டு)களைப் பெற்றிருப்பவர்களும் அனுமதிக்கப்படுவார்கள்,"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

'மல்லிகா'—நாடகம்

8—3—55 செவ்வாய் இரவு 9 மணிக்கு பலமனேரி ரோடில், லட்சுமணபுரத்தில், தோழர் மு. இயற்கைப்பித்தன் தலைமையில் 'மல்லிகா' என்ற நாடகம் இலவசமாக நடைபெறும்.

மலேயாவுக்கு - தஞ்சை அரிசி

பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக சென்னையிலிருந்து மலேயாவுக்கு அரிசி அனுப்பப்படுகிறது.

'சென்னை மாநிலம்' என்ற கப்பல் சென்னையிலிருந்து 430 டன் அரிசியும், 600 டன் வெல்லமும் ஏற்றிக்கொண்டு, சிங்கப்பூர் செல்லும் வழியில் நாகை வந்துள்ளது.

இதனால் அரிசி 'மார்க்கெட்' சற்று உயர்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

தஞ்சை அரிசிக்கு இலங்கையிலும் நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கிறதாம்!

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுமார் 6½ கோடி பேர் பயன்பெற்று வருகின்றனர்.

மத்தியப் பிரதேசத்தில் - பலமணத் தடை

மசோதாவிற்கு 8 ஆண்டுகளாக ஏற்பட்ட இடையூறுகள்

சட்டமாக விடாமல் பலமுறை 'பேசித் தீர்த்தனர்' எதிர்க்கட்சியினர்!

சுதந்திரத்திற்குப் பின் சட்டமான முதல் தனி நபர் மசோதா!

நாகபுரி, மார்ச் 4—

ஒருவன், மனைவி இருக்க, வேறு ஒரு பெண்ணை மணம் செய்துகொள்வதைத் தடுக்கும் மசோதா, மத்திய பிரதேச சட்ட சபையில் முடிவாக நிறைவேறிவிட்டது.

இப்பல மணத் தடை மசோதா, தனி நபரால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள ஒன்றாகும். சுதந்திரத்திற்குப்பின் சட்டமாக்கப்பட்டுள்ள தனி நபர் மசோதா இது ஒன்றேயாகும் என அறிவிக்கப்படுகிறது.

இம்மசோதா எட்டு ஆண்டுகளுக்குமுன், இராதாதேவி கோயங்கா என்ற காங்கிரஸ் பெண் உறுப்பினரால் ம. பி. சட்ட சபையில் கொண்டுவரப்பட்டதாகும். மசோதாவை சட்டமக்கா முடியாமல் மேற்படி பெண் உறுப்பினர் ஏமாற்றத்திற்குமேல் ஏமாற்றத்தைப் பெற்றுவந்திருக்கிறார்கள்.

மசோதாவை நிறைவேற்றவிடாமல் இதுவரை, எதிர்க்கட்சியினர் மிகமிகச் சாமர்த்தியமாக நடந்துகொண்டுவந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் சிலராக இருந்தும்கூட, சட்டசபையில் மசோதா முன்மொழியப்பட்ட ஒவ்வொரு தருணத்திலும், மசோதாமீது வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பி, வெட்டிப் பேச்சில் காலத்தைக் கழித்து, நிறைவேற விடாமல் மசோதாவைத் தடுத்து வந்திருக்கின்றனர் எதிர்க்கட்சியினர்

மசோதாவிற்குச் சாதகமாக 35 பேர்கள் வாக்களித்துள்ளனர். ஐவர் எதிர்த்துள்ளனர்.

மணமான ஒருத்தியோ ஒருவனோ, கணவனோ அல்லது மனைவியோ உயிருடன் இருக்கும்பொழுது வேறு ஒரு மணம்செய்து கொள்வதை சட்டம் தடுக்கிறது

சட்டத்தை மீறும் தம்பதிகளின் பெற்றோர்களுக்கும் அல்லது கண்காணிப்பாளர்களுக்கு ஆறு மாத சிறைவாசம், அபராதம் ஆகிய தண்டனைகளைக் குறிப்பிடுகிறது. திருமணத்தையும் செல்லாததாக்குகிறது.

சட்டத்திலிருந்து, ஷெட்யூல் பழங்குடி மக்களுக்கு விதிவிலக்குக் கொடுத்திருக்கிறது, ஆய்வுக் குழு.

சென்னை சட்ட சபையில்...

தோட்ட ஊழியர்கள் நிலை

ஜமீன் தோட்டத் தொழிலாளர்களின் கூலி, வேலைநிலைமை ஆகியவற்றைப் பரிசீலித்துத் தீர்ப்புக் கூறுவதற்கு நியமிக்கப்பட்ட 'டிரிபியூனல்,' விரைவிலேயே தன்னுடைய முடிவுகளை வெளியிடுமெனத் தாம் நம்புவதாக அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

அரசினர் மாணவ விடுதிகள்

"அரசினர் மாணவ விடுதிகளின் நடைமுறை, நிர்வாகம் ஆகியவற்றை ஒழுங்காக நடத்துவதைப் பற்றி கவனிக்க ஒரு விசேட அதிகாரியை அரசாங்கம் நியமிப்பதற்கு உத்தேசித்துள்ளது," என்று அமைச்சர் [illegible] அறிவித்தார்.

புத்தி சுவாதீனமற்ற சிறுவர்கள்

"பயிற்சிபெற்ற ஆசிரியர் கிடைத்தவுடன், புத்திசுவாதீனமற்ற குழந்தைகளுக்கான பள்ளி ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்," என்று அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்தார்.

சாத்தியமில்லையாம்!

தீயணைக்கும் நிறுவனங்களுக்கு ஏராளமான வகையில் செலவாகிறது; நிர்வாகத்திற்கும் அது சுமையாகவுள்ளது; எனவே, எல்லாத் தாலுகாக்களுக்கும் தீயணைக்கும் நிலையங்களை ஏற்படுத்துவதென்பது சாத்தியமற்ற காரியம்" என்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

கல்லூரிகளில் போதனு - மொழியாகத் தமிழ்!

'கோரிக்கை இந்தி வெறியராலேயே எழுந்தது!'

மதுரை, மார்ச் 6—

"இந்தியா முழுவதும் கல்லூரிகளில் இந்தி மொழியையே போதனு மொழியாகக் கொண்டு பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வெளியிடப்பட்டதின் விளைவாகத்தான், தென்னிந்தியாவில் பல்கலைக் கழகங்களில் தமிழ் அல்லது தெலுங்கு இவற்றின் மூலம் பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது,"

—என்று, திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத் துணை வேந்தர் எஸ். கோவிந்தராஜுலு, மதுரை கல்லூரி ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தி ஆதரவாளர்கள் செய்யும் முயற்சிகளின் விளைவாகவே. இந்தக் கோரிக்கை வலுத்து வருகிறது," என்றும் அவர் பேசியிருக்கிறார்.

'ஆங்கிலத்தைக் கைவிட வேண்டும் என்பவர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்,' என்ற அவசியத்தையும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

இன்னுமொரு

பற்றுக்குறை 'பட்ஜெட்'

ஐதராபாத் மாநில சட்டசபையில், நிதி மந்திரி விநாயகராவ் வித்யாலங்கர், 1955—56ம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மாநிலத் திட்டத்திலும் வரவைக் காட்டிலும் செலவு ரூ. - 221 கோடி அதிகமாக உள்ளது

சிறு வரிகள் மூலம் ரூ. 40 லட்சம் திரட்டவும், மிகுதியை கடன் எழுப்பிச் சரிக்கட்டிக் கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

வரவு ரூ. 3061.84 லட்சமாயும், செலவு 3282.84 லட்சமாயுமிருக்குமெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

தோற்றார்!

சென்னை சட்டசபைக்கு சாத்தான்குளம் தொகுதியில் நடைபெற்ற உபதேர்தலில் தோழர் எஸ். பி ஆதித்தன் போட்டியிட்டு தோல்வி கண்டிருக்கிறார். காங்கிரஸ் கட்சி சார்பில் நின்ற செல்வராஜன் வெற்றி பெற்றிருக்கிறார் இன்னும் இருவரும் தோற்றிருக்கின்றனர்.

அகதிகள் மறுவாழ்விற்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ரூ. 17 கோடியை இந்தியப் பேரரசு ஒதுக்கி இருக்கிறது. இப்பெருந் தொகை கிழக்கில் உள்ள ஏழு மாநிலங்களுக்கு வினியோகிக்கப்படும்.

மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளின் மறு வாழ்விற்காக நடைமுறை ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 14·6 கோடியைக் காட்டிலும், இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ளது கூடுதலானதாகும்.

இதுவுமன்றி, இதற்குப் புறம்பாக, அகதிகளின் தொழிலுக்குத் தரப்படும் கடன் எனும் பெயரில் ரூ. 2·45 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தொகையும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகளுக்குச் செலவிடப்படும்.

பாகிஸ்தான் அகதிகளில் பெரும்பான்மையினரை ஏற்று வாழ்வளித்து வரும் மேற்கு வங்கத்திற்கு மட்டும், மேற்படி தொகையில் ரூ. 13 கோடி ஒதுக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.